20.11.2025 MCOP No.60/2022

சாட்சி : PW 2 குப்புச்சாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. இறந்து போன சீதாலெட்சுமி எனக்கு உறவினர் என்றால் சரிதான், என் சின்னம்மா ஆவார். ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் எந்த வண்டியில் எங்கிருந்து வந்தேன் என்றால் திருப்பாலக்குடியிருந்து தேவகோட்டை நோக்கி TN 63 AV 5366 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன். நான் கிளம்பும்போது தான் அந்த காரும் கிளம்பியது என்றால் அது சுமார் 15 நிமிடங்களுக்கு முன்பு கிளம்பியது, தேதி மாதம் தெரியவில்லை. எந்த இடத்தில் என்னை அந்த வண்டி தாண்டியது என்றால் மேல்பனையூர் பாலத்திற்கு முன்பாக அந்த வண்டி என்னை கடந்து சென்றது. என்னை கடந்து சென்று எவ்வளவு நேரத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் 2 நிமிடத்தில் விபத்து ஏற்பட்டது. அந்த ரோட்டில் ஏராளமான வாகனங்கள் கடந்து சென்றது என்றால் ஆமாம்.

2. எதிர்திசையில் இருந்தும் ஏராளமான வாகனங்கள் கடந்து சென்றது என்றால் 2, 3 வாகனங்கள் எதிர் திசையில் கடந்து வந்தது. என் வாகனத்தை முந்தி சென்ற பின்புதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த வாகனம் மிதமான வேகத்தில் சென்றது என்றால் சரிதான். கார் ஓட்டிய நபர் எனக்கு உறவினர் என்றால் தூரத்து உறவினர் ஆவார். சீதாலெட்சுமியின் கணவருக்கு தான் விவசாய நிலங்கள் உள்ளது என்றும், சீதாலெட்சுமிக்கு விவசாய நிலங்கள் இல்லை என்றும் சொன்னால் சரிதான். குடும்பமாகத்தான் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் தான் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், நான் சம்பத்தை நேரடியாக பார்க்காமலும், அது குறித்து புகார் கொடுக்காமலும் தற்போது விபத்தில் இறந்தவரும் காயம்பட்டவரும், விபத்தை ஏற்படுத்தியவரும் என் உறவினர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் எவ்வித வேலையும் இல்லாமலும், வருமானம் இல்லாமலும் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.